**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 60/2024**

**Prosecution Witness : 15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. செந்தில் குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ராஜலிங்கம்** | **Calling** | : | **காவல் ஆய்வாளர்** |
| **Village** | : | **DCB** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **33** |
| | | | **Dated** | : | **28.05.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**Accused present. Both side counsels present.**

அ.சா. 15 (பட்டியல் சாட்சி 19), திரு. **செந்தில் குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட குற்ற பிரிவு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிகின்றேன். சம்பவ சமயத்தில் நான் செம்பட்டி காவல்நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தேன். 06.08.2023ம் தேதி கன்னிவாடி காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் 13.00 மணிக்கு திண்டுக்கல், கன்னிவாடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக இருந்த அசா. 14 பதிவு செய்த வழக்கை 14.00 மணிக்கு கன்னிவாடி காவல் நிலையம் சென்று புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே மேற்படி சார்பு ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே 14.30 மணிக்கு கன்னிவாடி, கொட்டாரபட்டி கிழக்கு சாலையில் உள்ள சரவணன் வீட்டிற்கு செல்லும் வழியில் உள்ள சம்பவ இடத்தை

சாட்சிகள் சரவணக்குமார் மற்றும் ஆகாஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அது Ex. P16. மேற்படி சாட்சிகளை தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு கொட்டாரபட்டியில் இருந்த வாதி கீதலோசினி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த அசா. 2, 3, 4, 5 ஆகியோர்களை விசாத்து தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு திண்டுக்கல் மருத்துவமனைக்கு சென்று 16.00 மணிக்கு வழக்கில் இறந்துபோன புகழ்நாதனின் பிரேத்தை, அவரது மனைவி அசா. 1 அடையாளம் காட்ட பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 16.00 மணி முதல் 17.00 மணி வரை பிரேத விசாரணை செய்து, அறிக்கை தயார் செய்தேன். அது Ex. P17. மேற்படி இறந்துபோன புகழ்நாதனின் இறப்பிற்கான காரணம் அறிய, அவரது பிரேத்தினை பிரேத பரிசோதனைக்கு அனுப்புவதற்காக காவலர் திருமதி. சுகன்யா அவர்களை நியமித்து, மருத்துவனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அந்த வேண்டுகோள் கடிதம் Ex. P18. அதன்பிறகு மாலை 06.00 மணி அளவில் கன்னிவாடி காவல் நிலையம் வந்து, நிலைய ஆய்வாளரிடம் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு ஒப்படைத்தேன். வழக்கு சம்மந்தமாக கன்னிவாடி காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

கன்னிவாடி - செம்பட்டி காவல் நிலைய தூரம் சுமார் 8 கி.மீ. 06.08.2023ம் தேதி 13.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் தகவல் கிடைத்து, மதியம் 01.30 மணி அளவில் கன்னிவாடி காவல் நிலையம் சென்று விட்டேன். அரசு மருத்துவமனையில்

நோயாளியை இறந்த நிலையில் பெற்ற நேரம் 11.35 என குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவனைக்கு செல்வதற்கு முன்பு அங்கு என்ன நடந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக கன்னிவாடி பொதுநாள் குறிப்பை பார்வையிட்டேன். அதே போல மேற்படி காவல் நிலைய தகவல் பெறும் பதிவேட்டை பார்வையிட்டேன், அதில் மேற்படி தகவல் பெற்றதாக குறிப்பு இல்லை. விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவரை நான் விசாரிக்கவில்லை. திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து காலை 11.35 மணிக்கு கன்னிவாடி காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றும், அதை நான் வழக்கிற்காக நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல அசா. 4 சம்பவத்தன்று மதியம் 12.30 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து கொடுத்த புகார் வாக்குமூலம் வழக்கிற்காக எனது ஆலோசனையின் பேரில் மறைக்கப்பட்டது என்றால் இல்லை.

அசா. 7 மற்றும் அசா. 8 ஆகியோர் காவல்நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு ½ நேரத்தில் போலீசார் வந்து, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என சொல்லி இருந்தால் தவறு. வேறு அதிகாரிகளால் மேலே சொன்னபடி சம்பவ இடத்தில் சம்பவம் நடந்த ½ நேரத்தில் வேறு ஒரு அதிகாரியால் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கப்பட்டது என்றால் தவறு. மேற்படி மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் மாறி இருந்தது என்றால், அது வழக்கிற்காக மறைக்கப்பட்டது என்றால் தவறு. இந்த வழக்கினுடைய பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவை வழக்கிற்காக பின்னிட்டு என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

அசா. 1 என் விசாரணையில் சரவணனின் வீட்டிற்கு எதிரே ராஜா வீடு இருப்பதாக சொல்லி இருக்கிறார் என்றால் இல்லை. என்

விசாரணையின் படி மெயின் ரோட்டில் இருந்து பிரிந்து செல்லும் மண் சந்திப்பில் அசா. 2 சரவணனின் வீடு உள்ளதாக தெரிய வந்தது என்றால் சரிதான். சரவணனின் வீட்டின் அருகே கோபால், சுப்பிரமணி, முத்துவேல், முத்தையா வீடுகள் உள்ளது. அவர்களை இந்த வழக்கில் நான் விசாரித்த வரையில் சாட்சியாக சேர்க்கவில்லை. சரவணன் வீட்டில் இருந்து மெயின் ரோடு சுமார் 30 அடி தூரத்தில் உள்ளது. சரவணனின் வீடும், எதிரியின் வீடும் வெவ்வேறு பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல. இரண்டு வீட்டிற்கும் இடையே சுமார் 50 அடி தூரம் இருக்கும். என் விசாரணையில் உள்ள சாட்சிகள் சம்பவம் சரவணன் வீட்டு வாசலில் இறக்கிவிட்டு, திரும்பி புறப்படும் போது நடந்ததாக சொல்லி இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

வரைபடத்தில் மொட்டணம்பட்டி கிழக்கு தெரு தனியாக குறிப்பிடவில்லை. அசா. 3 மற்றும் அசா. 4 ஆகியோரின் வீடுகள் வரைபடத்தில் குறிப்பிடவில்லை. அவர்கள் வீடுகள் சம்பவ இடத்தில் இருந்து, வேறு இடத்தில் இருப்பதால் தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகள் சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்று, அங்கே கீழே கிடந்த புகழ்நாதனை விலக்கி, கீழே கிடந்தவரை தூக்கி எழுப்பி விட்டோம் என்று சொல்லி இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

சம்பவ இடத்தில் இருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனை செல்வதற்கு சுமார் 30 நிமிடம் தேவைப்படும். அதே போல கன்னிவாடி காவல் நிலையத்திற்கு செல்ல 15 நிமிடம் தேவைப்படும். இறந்தவர் பிரேதத்தை, பிரேத விசாரணைக்கு அனுப்புவதற்கு முன்பாக படிவம் 86 ல் பிரேதத்தில் இருந்த காயங்களைப் பொறுத்து, வலது கால் முட்டியிலும், இடது கால் முட்டியிலும் சிராய்ப்பு காயங்கள் இருந்தது. தலையின் வெளிப்புறம் இரத்த காயங்கள் இருந்ததாக குறிப்பிடவில்லை. அசா. 2, 3,

4 ஆகியோர் இறந்தவரை, எதிரி கீழே தள்ளிவிட்டு தலையிலும், நெஞ்சிலும் அடித்தார் என சொல்லி இருக்கிறார்கள் என்றால் இல்லை, மாறி மாறி அடித்து கீழே தள்ளி விட்டார் என்று சொல்லி இருக்கிறார்கள். நெஞ்சிலும், தலையிலும் அடித்ததாக குறிப்பிட்டு மேற்படி சாட்சிகள் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் சரவணனின் அம்மா, அப்பா ஆகியோர் அவர்கள் வீட்டில் இருந்ததாக அசா. 2 மற்றும் அசா. 3 சொல்லி இருக்கிறார்கள். காயம்பட்ட நபரை செந்தில் குமாருக்கு சொந்தமான இண்டிகா காரில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக எனது விசாரணையில் தெரிய வந்தது. காரின் விபரங்கள் பற்றி நான் விசாரிக்கவில்லை.

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் வழக்கு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் பிரேத விசாரணை அறிக்கை ஆகியவை நான் முதல் விசாரணையில் சொன்னது போல தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.05.28 18:22:45 +0530